# செய்தி மடல்

## NEWS LETTER – SAFE LABOUR MIGRATION PROJECT -2016-2019

Bi-Annual -1st August 2017 to 28th February 2018

SWOAD

### SWOAD நிறுவனத்தினைப் பற்றி

சுவாட் நிறுவனமானது அம்பாறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழுகின்ற நலிவுற்ற மக்களின் சமூக, பொருளாதார வாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்குடன் 1995ம் ஆண்டு ஸ்தாபகர், இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டு சமூக மட்டத்தில் பல்வேறு நேர்க்கணிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற ஒரு அரசசார்பற்ற நிறுவனமாகும்.

### தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர்வதற்கான வழிகாட்டல் செயல்திட்டம் பற்றி

சுவாட் நிறுவனமானது அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் அமைப்பின் நிதி உதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர்வதற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள மற்றும் மீண்டும் நாடு திரும்பியுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுடன் 4 பிரதான பிரிவுகளில் பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

- தகவல்களை வழங்கல்
- சட்ட ரீதியான உதவிகளை வழங்கல்.
- சமூக உளநல உதவிகள் வழங்கல்.
- திரும்பி வருகை மற்றும் மீள இணைவு.


**Contact Information:**

K.Premalathan

Program Manager

Tel : 0672279299, 0772955736

Email: premalathan@swoad.lk


### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கொள்தகுதிறன் செயலமர்வுப் பயிற்சி



புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் முகமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கொள்தகுதிறனை விருத்தி செய்யும் நோக்கில் 54 உத்தியோகத்தர்களுக்கு 7நாட்கள் கொண்ட வதிவிடப்பயிற்சி "Introduction to Labour Migration" எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது. இப்பயிற்சியானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உயர்மட்ட அதிகாரிகளினால் நடாத்தப்பட்டது. பயிற்சியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஆலோசகர் திருமதி.பத்மினி ரட்ணாயக்கா அவர்களினால் வழங்கப்பட்டது.

### மனித ஆட்கடத்தலை கிராமங்களில் தடுப்பதற்கான ஒரு நாள் செயலமர்வு பயிற்சி

இலகுவில் பாதிப்படையக்கூடிய நிலையில் இருக்கின்ற குடும்பங்களை இலக்கு வைத்து வற்புறுத்தலின் பெயரில் வஞ்சகமாக கடத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்ற நிலையைக் குறைக்கும் முகமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோத்தர்களுக்கு மனித வியாபாரக் குற்றத்தை கிராமங்களில் தடுப்பதற்கான ஒரு நாள் கொண்ட பயிற்சி நடாத்தப்பட்டது. இப்பயிற்சியினை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மனித ஆட்கடத்தல் தொடர்பான பிரிவின் முகாமையாளர் அவர்களினால் நடாத்தப்பட்டது

இவ் கருத்தரங்கில் 52 உத்தியோத்தர்கள் கலந்து சட்ட நடைமுறைகள் தொடர்பாக அறிந்து கொண்டனர்.



## மாவட்ட மட்டத்தில் சட்ட உதவியாளர்களாக பயிற்றப்பட்டவர்களுக்கான மாநாடு

வெளிநாடு செல்கின்ற குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை கிராம மட்டத்தில் அடையாளம் கண்டு அவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் முகமாக திட்டக்கிராமங்களில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய நிறுவன பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில் பயிற்றப்பட்ட 110 சட்ட உதவியாளர்களை ஒன்றிணைத்து மாவட்ட மட்டத்திலான மாநாடு நடாத்தப்பட்டது. இம்மாநாட்டில் சட்ட உதவியாளர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட அனுபவங்கள், சவால்கள் மற்றும் புதிய தகவல்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.



## மத்தியஸ்த சபைகளின் சேவைகளை வினைத்திறனான வகையில் கொண்டு செல்வதற்கான உதவி வழங்கல்

திட்டப் பிரதேசங்களான ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், கல்முனை தமிழ்பிரிவு, காரைதீவு, உகண போன்ற பிரதேசங்களில் தொழிற்படுகின்ற மத்தியஸ்த சபைகளின் சேவைகளை வினைத்திறனான வகையில் கொண்டு செல்வதற்கும் இதன் ஊடாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் முகமாக இவ் சபைகளுக்கு தளபாடங்கள் மற்றும் காகிதாதிகள் வழங்கப்பட்டது. இதன்படி கல்முனை தமிழ் பிரிவில் உள்ள மத்தியஸ்தசபைக்கான தளபடங்களை கல்முனை தமிழ் பிரிவிற்கான பிரதேச செயலாளர் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டது.



## விசேட தேவைக்குட்பட்ட புலம்பெயர் தொழிலாளர் பிள்ளைக்கான உதவி வழங்கல்

சுவாட் நிறுவனமானது பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் முகமாக விசேட தேவைக்குட்பட்ட குழந்தை ஒன்றுக்கு உதவி வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன் பிள்ளைபராய அபிவிருத்தி உத்தியோகத்தர், சுவாட் பணயாளர்கள் கலந்து கொண்டனர்.



## வீதி நாடகங்கள் ஊடாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள்

தொழிலாளர்கள் பாதுகாப்பாக வெளிநாடு செல்வது தொடர்பான தகவல்கள் வழங்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் வீதி நாடகங்கள் ஊடாக பொதுமக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் கிராமங்கள் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது. இதன்போது பொருத்தமான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகின்றது.



## தொண்டர்களுக்கு (Volunteers) பாதுகாப்பான புலம்பெயர் தகவல் வழங்கும் கருத்தரங்கு

புதிதாக தெரிவு செய்யப்பட்ட திட்டக்கிராமங்களில் பாதுகாப்பான முறையில் தொழிலாளர்கள் வெளிநாடு செல்வது தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு பயிற்றப்பட்ட தொண்டர்கள் ஊடாக வழங்கும் முகமாக 140 தொண்டர்கள் பயிற்றப்பட்டுள்ளனர்.




## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல்

திட்டக்கிராமங்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து அப்பிரச்சினைகளை அரச மட்டத்திற்கு ஊடகங்கள் மூலம் கொண்டு செல்லும் நோக்கில் சுவாட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அவர்களின் தலைமையில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் களுடனான மாநாடு நடாத்தப்பட்டது.



## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல்



வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தரின் மாவட்ட இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் குறிப்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் SDC நிறுவன தேசிய திட்ட உத்தியோகத்தர் திரு.எம்..பிரகாசன் அவர்கள் கலந்து கொண்டார்

## கிராம மட்டங்களில் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள்

திட்டக்கிராமங்களில் பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கி அவர்களை விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக பயிற்றப்பட்ட அரச உத்தியோகத்தர்கள், சட்ட உதவியாளர்கள், தொண்டர்கள் மற்றும் சுவாட் பணியாளர்கள் ஊடாக மாபெரும் விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கைகள் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டது. இவ் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்வுகளின் போது பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஸ்ரிக்கர்கள் பொதுமக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டது.



## சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தின நிகழ்வு

சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு சுவாட் நிறுவனமும், கல்முனை (தமிழ் பிரிவு) பிரதேச செயலகமும் இணைந்து கடந்த டிசம்பர் மாதம் 18ம் திகதி பிரதேச செயலாளர் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இதில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்களும் அவர்களின் குடும்பங்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டப்பட்டப்பட்டதுடன் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டது.




## பிரதேச செயலகங்களில் இயங்கி வருகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவிற்கான 7 ஸ்கேனர் இயந்திரம் வழங்கும் நிகழ்வு

பாதுகாப்பான புலம்பெயர் செயல்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 7 பிரதேச செயலகங்களில் சுவாட் நிறுவனத்தின் ஊடாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் சேவைகளை வினைத்திறனான வகையில் கொண்டு செல்லும் முகமாக ஸ்கேனர் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. இதன்படி அண்மையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் செயலாளர் அவர்களிடம் சுவாட் நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்களினால் கையளிக்கப்பட்டது.




## புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களின் நிருவாகிகளுக்கான கொள்தகுதிறன் பயிற்சி

கிராம மட்டங்களில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கிராம மட்டங்களில் புலம்பெயர் தொழிலாளர்களைக் கொண்ட 30 புலம்பெயர் தொழிலாளர் சங்கங்கள் இத்திட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டு அச்சங்கங்கள் சிறப்பாக இயங்குவதற்கு தற்போது அச்சங்கத்தின் நிருவாக உறுப்பினர்களுக்கான கொள்தகுதிறன் பயிற்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றது.



## பயிற்றப்பட்ட அரச உத்தியோகத்தர்களுடனான திட்ட மீளாய்வு கலந்துரையாடல்

காரைதீவு பிரதேசத்தில் இத்திட்டத்தின் ஊடாக பயிற்றப்பட்ட அரச உத்தியோகத்தர்களுடனான கலந்துரைாடல் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் சுவாட் நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் SDC நிறுவன தேசிய திட்ட உத்தியோகத்தர் திரு.எம்.பிரகாசன் அவர்களும் கலந்து கொண்டார்.



## பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் Campaign

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய திருவிழாவில் பங்கு கொள்ள வந்திருக்கும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான தகவல்களை வழங்கி விழிப்புணர்வூட்டும் நோக்கில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வூட்டும் மாபெரும் Campaign இடம்பெற்றது.




## அரச உத்தியோகத்தர்களுக்கான சமூக உளநலப்பயிற்சி

புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் சமூக உளநலம் தொடர்பாக பாதிக்கப்பட்டிருக்கின்ற குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உளநல ஆற்றுப்படுத்தல் சேவைகளை வழங்கும் முகமாக பிரதேச செயலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 2நாட்கள் கொண்ட பயிற்சி இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் திரு. ராஜாராம் சுப்பையா அவர்களினால் சிறப்பாக நடாத்தப்பட்டது.



## 3வது Partner Paltform Meeting

SDC பங்காள நிறுவனங்களின் Partner Platform 3வது கலந்துரையாடலனாது அக்கரைப்பற்று சுவாட் நிறுவனத்தில் இடம்பெற்றது. இதில் குறிப்பாக இலங்கையிலுள்ள SDC பங்காள நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற பாதுகாப்பான புலம்பெயர்வு திட்டத்தின் அனுபவங்கள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.




## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு



# Highlights…

## 1. Access to Information :

- 149 தொண்டர்கள் கிராம ரீதியாக பாதுகாப்பான புலம்பெயர்வு தகவல்கள் தொடர்பாக பயிற்றப்பட்டுள்ளனர்.
- 838 அரச உத்தியோகத்தர்கள் பாதுகாப்பாக புலம்பெயர்வு தகவல்கள் தொடர்பாக பயிற்றப்பட்டுள்ளனர்.
- 18000 மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.
- 30 கிராம சேவகர் பிரிவுகளில் புலம்பெயர் தொழிலாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- 54 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கொள்திறன் பயிற்சி வழங்கப்பட்டது.

## 2. Access to Legal support :

- 111அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சட்ட உதவியாளர்களாக பயிற்றப்பட்டுள்ளனர்.
- 58 புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 28 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து ரூபா. 2,821,060 பணம் பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.
- நாட்டிற்கு வரமுடியாமல் இருந்த 15 ஆண் மற்றும் பெண் புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உதவியுடன் நாட்டிற்கு வரவழைக்கப்பட்டனர்.

## 3. Access to Psychosocial Support :

- 122 அரச உத்தியோகத்தர்கள் சமூக உளநலம் தொடர்பாக பயிற்றப்பட்டுள்ளனர்.
- 30 சிறுவர்கழகங்கள் மீள் புனரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
- 30 வயோதிபர் சங்கங்கள் மீள் புனரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
- 620 சமூக உளநல பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 4. Return and Re integration :

- 688 இளைஞர், யுவதிகள் தொழில்வழிகாட்டல் தொடர்பாக பயிற்றப்பட்டுள்ளனர்.
- 345 புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் சுயதொழில்களில் ஈடுபடுவதற்கான கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கான இணைப்பாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


**Organization Contact:**

**V.Paramasingam**

**President**

**Tel : 067-2279299,0772242265**

**Email : paramasingam@swoad.lk**